மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2023ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 07ம் நாள் வியாழக்கிழமை

இ.ம.எண்.02/2023
உள்
அசல் வழக்கு எண்.22/2023
-------------

ஜி.குருசாமி ... மனுதாரர்/வாதி

/எதிர்/

காளியம்மாள் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த மனு 28.07.2023ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 25.08.2023ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.அ.கணபதிராமன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.ஜெகதீஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதார் தரப்பு எதிர்உரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 16, 17 மற்றும் பிரிவு 151-ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், மனுவை ஏற்று வழக்குரையில் மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி 28.07.2023ம் தேதி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**<u>2) மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-</u>**

அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தனது வழக்கறிஞர் மூலம்

ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். அதில் வாதியின் தகப்பனார் குருசாமி 13.08.2022ம் தேதி வழக்கு சொத்தைப் பொறுத்து வாதிக்கு ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்திருப்பதாக காட்டப்பட்டுள்ளது என்றும், ஆனால் வழக்குமூலத்தில் மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை 13.07.2002ம் தேதி எழுதிக் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். உண்மையில், மனுதாரர்/வாதிக்கு 13.08.2002ம் தேதி வாதியின் தகப்பனார் குருசாமி வழக்கு சொத்தைப் பொறுத்து ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். வழக்குரையில் அதைப்பற்றி விவரிக்கும்பொழுது தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் சரியான தேதியான 13.08.2002ம் தேதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் வழக்குமூலம் பற்றிய காலத்தில் தட்டச்சுபிழையின் காரணமாக தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் தேதி தவறுதலாக 13.07.2002 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமாக ஏற்பட்டுவிட்டது. எனவே, வழக்குரையில் சீர்திருத்தம் செய்துகொள்ள அனுமதி வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். மனு மீது எதிர்மனுதாரருக்கு எவ்வித நியாயமான ஆட்சேபணைகளும் இருக்கப்போவதில்லை. மனுவை அனுமதிக்காது போனால் மனுதாரருக்கு அநேக கஷ்டம், நஷ்டம் ஏற்பட்டுவிடும். எனவே, வழக்குரையில் சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**<u>3) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:-</u>**

தபசில் கண்ட சொத்திற்கு பிரதிவாதி தந்தை நாராயணன் பெயருக்கு அரசு மூலம் பட்டா எண்.350 வழங்கப்பட்டு அரசு மூலம் வீடு கட்டி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், பிரதிவாதி தந்தை நாராயணன் அவர்களுக்கு அரசு மூலம் கட்டிக் கொடுத்த வீட்டை பெருமாள் மகன் குருசாமி என்பவர் தனக்கு பூர்விகமாக பாத்தியப்பட்டது என்று மோசடியாக தனது மகன் குருசாமி என்பவருக்கு 13.08.2002ம் தேதி தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எழுதிக்

கொடுத்துள்ளார். மேற்படி மோசடியாக பெற்ற 2002ம் தேதிய தானசெட்டில்மெண்ட பத்திரத்தை வைத்தக் கொண்டு மோசடியாக 1997, 1998ம் ஆண்டிற்கு மனுதாரர்/ வாதி தனது பெயருக்கு வீட்டு வரி செலுத்தியுள்ளார். அது சட்டவிரோத செயலாகும். மேற்படி வழக்கில் எதிர்வழக்குரை 21.06.2023ம் தேதியை எதிர்மனுதாரர்/பிரதிவாதி மூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் பிராது வழக்குமூலத்தில் தானசெட்டில்மெண்ட் பத்திரம் தேதி 13.08.2002ம் தேதிக்கு பதிலாக 13.07.2002ம் தேதி என்று தட்டச்சு பிழை ஏற்பட்ட விபரம் தற்போது எதிர்வழக்குரைய பார்க்கும் போது தான் தெரிய வந்தது என்று சொல்லியிருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. எனவே, எதிர்மனுதாரர்/பிரதிவாதி செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடக்கோரி எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

5). இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

6). மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் இல்லை.

7). இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

## 8). தீர்வு:-

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிருரையும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் மனுவை ஏற்று வழக்குரையில் மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி 28.07.2023ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும் நஷ்டமும் ஏற்படக்கூடும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும்.

மனுதாரரால் மனுவில் சொல்லப்பட்டுள்ள விபரம் குறித்து வழக்கு விசாரணையின் போது மட்டுமே தீர்மானிக்க முடியும். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரருக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, மனுவை ஏற்று வழக்குரையில் மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி 28.07.2023ம் தேதி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 07ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சி சான்றாவணங்கள்:- இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.